# பெருநகர சென்னை மாநகராட்சியில் 2015 ஆம் ஆண்டு பருவமழை காலத்திற்கு பின் மழைநீர் தேங்காமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- 2015 வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்குப்பின் உலக வங்கி நிதிப் பெற்று சென்னையின் விரிவாக்கப்பட்ட பகுதிகளான ஆலாந்தூர், வளசரவாக்கம் மற்றும் அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் ரூ.1104 கோடிகளில் 376 கி.மீ. நீளத்திற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு அதில் 300 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டு அவையாவும் நீர் செல்லும் பெரிய வடிகால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

  இதனால், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் மழை வெள்ளம் பாதித்த இந்த 3 மண்டலங்களிலும் மிகப்பெரிய பயன் ஏற்பட்டு சுமார் 15 லட்சம் மக்கள் பயன் பெறுகிறார்கள்,

- அதேபோல் அதே வருடம் 306 இடங்கள் மிகவும் தண்ணீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்டு அதில் 126 இடங்களில் மழைநீர் வடிகால்வாய்களை பழுதுபார்த்தும் 52 இடங்களில் சாலைகளின் சரிவு மட்டத்தை சீர் செய்தும் நீர் தேங்காமல் செய்யப்பட்டது. மீதமுள்ள 129 இடங்களில் புதியதாக இணைப்பு கால்வாய்கள் சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொது பணித்துறை மூலம் கட்டப்பட்டு இவையாவும் சீர் செய்யப்பட்டுள்ளது.

  அவ்வாறு இளையாமுதலி தெரு, ஆர்.கே.நகர், கொடுங்கையூர் கால்வாய், வில்லிவாக்கம் சிட்கோநகர், கொரட்டுர் நார்த் சென்ட்ரல் அவென்யூ மற்றும் டிவிஸ் கனால், 18-வது மெயின் ரோடு, அண்ணாநகர், புரசைவாக்கம் ரோடு, அபிபுல்லா-ஜி.என்.செட்டி சாலை, தியாகராய நகர், வேளச்சேரி, ராஜ்பவன், ஸ்ரீநகர் காலனி, சோழிங்கநல்லூர், கண்ணகி நகர், மற்றும் அடையார் போன்ற இடங்களில் கட்டப்பட்டுள்ளது.

**<u>2015 ஆம் ஆண்டில் பருவமழையின் போது வெள்ளத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டதாக இனங்காணப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அறிக்கை</u>**

- **எண்ணூர் பகுதியில் எஸ்.வி. நகர் 1வது மற்றும் 2 வது பிரதான சாலை புதிய மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி.**

  எண்ணூர் பகுதியில் எஸ்.வி. நகர் 1வது மற்றும் 2 வது பிரதான சாலை மற்றும் காமராஜ் சாலையில் 2010 மீட்டர் நீளத்திற்கு கொசஸ்தலையாற்றில் மழைநீர் வடியுமாறு புதிய மழைநீர்வடிகால்கள் ரூ.288.00 இலட்சத்தில் கட்டப்பட்டது.
  இதன் மூலம் திருவொற்றியூர் மண்டலத்தில் எஸ்.வி.நகரை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளநீர் தேங்காத நிலை ஏற்பட்டுள்ளது.

- **கொடுங்கையூர் கால்வாய் (பகுதி-1, 0 மீட்டர் முதல் 850 மீட்டர் வரை, பகுதி-2 850 மீட்டர் முதல் 1150 மீட்டர் வரை மற்றும் பகுதி-3 1675 மீட்டர் முதல் 2191 மீட்டர் வரை) தூர்வாரும் பணி மற்றும் மேம்படுத்தும் பணி**.

  கொடுங்கையூர் கால்வாயில் தூர்வாருதல், சரியான அளவுகளின்படி வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் வேலி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன. இப்பணிகள் ரூ.2176.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கால்வாய் ஓரம் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.
  இதன்மூலம் கால்வாயின் ஆழம் அதிகரிக்கப்பட்டது அகலம் விரிவாக்கப்பட்டு அதன் வெள்ளத்தை வெளியேற்றும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- **அருணாசல ஈஸ்வரர் கோயில் (இளையா தெரு முதல் அருணாசல ஈஸ்வர கோயில் தெரு மற்றும் அருணாசல ஈஸ்வர கோயில் தெரு முதல் வடக்கு டெர்மினல் சாலை வரை) திருவொற்றியூர் சாலையில் புதிய மழைநீர் வடிகால்கள் கட்டுதல்.**

சிதிலமடைந்த மழைநீர் வடிகால்கள் இடிக்கப்பட்டு 1670 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டன. இத்துடன் அதிக அளவு நீரை வெளியேற்றும் சக்திகொண்ட மோட்டார் பம்புடன் ஜெனரேட்டர் வைக்க ஒரு அறையும் மற்றும் கீழ் நிலைதொட்டியும் ரூ.413 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

இதன் மூலம் இளையா தெருவினை சுற்றியுள்ள பகுதிகள், ஏ.ஏ.ஸ்கீம் ரோடு, அருணாசல ஈஸ்வரர் கோயில் தெரு, சென்னியம்மன் கோயில் தெரு ஆகியவைகளை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **கேப்டன் காட்டன் கால்வாய் (பகுதி-1, 2500 மீட்டர் முதல் 2940 மீட்டர் மற்றும் பகுதி-2, 2940 முதல் 3360 மீட்டர்) தூர்வாரும் பணி மற்றும் மேம்படுத்தும் பணி.**

கேப்டன் காட்டன் கால்வாயில் தூர்வாருதல், சரியான அளவுகளின்படி வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் வேலி அமைக்கும் பணி முடிக்கப்பட்டன. இப்பணிகள் ரூ.1024.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கால்வாய் ஓரம் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

இதன்மூலம் கால்வாயின் ஆழம் அதிகரிக்கப்பட்டது அகலம் விரிவாக்கப்பட்டு அதன் வெள்ளத்தை வெளியேற்றும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- **புரசைவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் பிளவர்ஸ் ரோடு ஆகிய சாலையில் சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிக்கால்களை இடித்து விட்டு புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி.**

  புரசைவாக்கம் நெடுஞ்சாலையின் வடக்கு பக்கத்தில் உள்ள சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்கள் இடிக்கப்பட்டு மழைநீர் ஓட்டேரி நல்லாவிற்கு செல்லும் வகையில் புதிதாக மழைநீர்வடிகால்கள் கட்டப்பட்டன. இந்த வடிகால்கள் 1030 மீட்டர் நீளத்திற்கு மில்லர்ஸ் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களுடன் இணையுமாறு ரூ.252.46 இலட்சம் செலவினத்தில் கட்டப்பட்டன. இதன் மூலம் புரசைவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் மில்லர்ஸ் சாலை அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டது.

- **அண்ணாநகர் 18வது பிரதான சாலையில் (வடக்கு மற்றும் தெற்கு) சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்களை இடித்து விட்டு புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி.**

  அண்ணாநகர் 18வது பிரதான சாலையில் சிதிலமடைந்த பழைய மழைநீர் வடிகால்வாய் இடிக்கப்பட்டு சாலையின் இரு மருங்கிலும் 1850 மீட்டருக்கு ரூ.352.18 இலட்சம் செலவினத்தில் மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டது.
  இதன் மூலம் அண்ணாநகர் 18வது பிரதான சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **சிட்கோ நகர் மற்றும் குமார சாமி நகர், வில்லிவாக்கம் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி.**

குமார சாமி நகர் மற்றும் சிட்கோ நகரில் 760 மீட்டர் நீளத்திற்கு ரூ.393.00 இலட்சம் செலவில் புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டன. இதன் வழியாக மழைநீர் ஓட்டேரி நல்லாவினை சென்றடையும்.

இதன் மூலம் குமார சாமி நகர் மற்றும் சிட்கோ நகரை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளம் தேங்காத நிலை ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது.

- **அபிபுல்லா சாலையில் மேம்பாட்டுப்பணிகள்**

அபிபுல்லா சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களின் சிதிலமடைந்த பகுதிகள் வடக்கு உஸ்மான் சாலையில் இருந்து மாம்பலம் கால்வாய் வரையில் 860 மீட்டருக்கு ரூ.196.00 இலட்சம் செலவினத்தில் சீரமைக்கப்பட்டன.

இடிந்த நிலையில் உள்ள மேல் ஸ்லாபுகள் மாற்றப்பட்டு இடிந்த நிலையில் உள்ள கட்டுமானங்கள் சீரமைக்கப்பட்டன.

ஜி.என்.செட்டி தெவில் குறுக்காக புதிதாக மழைநீர் வடிகால் கட்டுவதன் மூலம் இந்த மழைநீர்வடிகால் மழைநீரை நேரடியாக மாம்பலம் கால்வாயில் வெளியேற்றுகிறது.

இதன் மூலம் மழைநீர் வளைவான பாதையில் செல்வது தவிர்க்கப்பட்டு சீரான நீரோட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **தியாகராய நகர் பகுதியில் பசுல்லா சாலை மற்றும் வடக்கு உஸ்மான் சாலை ஆகிய பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி.**

பசுல்லா சாலையில் ரங்கராஜபுரம் மேம்பாலம் அருகில் ராமகிருஷ்ணா பள்ளி முதல் வடக்கு உஸ்மான் சாலை வரையில் 200 மீட்டர் நீளத்திற்கு ரூ. 30.30 இலட்சம் செலவினத்தில் புதிதாக மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டது. இதன் மூலம் பராங்குசபுரம், பசுல்லா ரோடு மற்றும் வடக்கு உஸ்மான் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **கோயம்பேட்டில் உள்ள காளியம்மான் கோயில் தெருவில் புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி**.

காளியம்மன் கோயில் தெருவில் 245 மீட்டர் நீளத்திற்கு ரூ.33.93 இலட்சம் செலவினத்தில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டப்பட்டது. இதன் மூலம் மழைகாலத்தில் கூட காளியம்மன் கோயில் தெரு, கோயம்பேட்டு பகுதிகளில் வெளியூர் பேருந்துகள் எளிதாக சிரமமின்றி வந்து செல்கின்றன.

- **சர்தார் பட்டேல் ரோடில் புதிதாக மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி**

அண்ணா பல்கலைகழகத்தை ஒட்டி சர்தார் பட்டேல் சாலைக்கு குறுக்காக புதிதாக மழைநீர் வடிகால் 1230 மீட்டர் நீளத்திற்கு ரூ.653.00 இலட்சம் செலவினத்தில் கட்டப்பட்டுள்ளது.
இதன் மூலம் சர்தார் பட்டேல் ரோடு மற்றும் ராஜ்பவன் பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டது

- **திருவான்மியூரில் எல்.பி. ரோட்டில் புதிதாக மழைநீர் வடிகால்கட்டும் பணி**.

வெஸ்ட் அவிகன்யூ மற்றும் திருவள்ளுவர் சாலையில், சாலையின் இருபுறமும் உள்ள மழைநீர் வடிகால்களை இணைக்கும் வகையில் திருவான்மியூர் சிக்னலில் உள்ள எல்.பி. ரோட்டின் குறுக்காக 30 மீட்டர் நீளத்திற்கு ரூ.17. 40 இலட்சம் செலவினத்தில் , மழைநீரை பக்கிங்ஹாம் கால்வாயில் வெளியேற்றும் வகையில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டப்பட்டது

இதன் மூலம் எல்.பி. ரோடு மற்றும் கிழக்கு காமராஜ் சாலை போன்ற அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள நீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **வெட்டுவாங்கனியில் உள்ள பெத்தேல் நகரில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணி**

  வெட்டுவாங்கனியில் உள்ள பெத்தேல் நகரில் 720 மீட்டர் நீளத்திற்கு ரூ.114.00 இலட்சம் செலவினத்தில் பக்கிங்ஹாம் கால்வாயில் சென்றடையும் வகையில் புதிதாக மழைநீர் வடிகால்கட்டடப்பட்டது.

  இதன் மூலம் வெட்டுவாங்கனியில் உள்ள பெத்தேல் நகர் பகுதிகளில் வெள்ள நீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **நீலாங்கரையில் உள் ள பாண்டியன் சாலை, குமரகுரு அவின்யூ மற்றும் சரஸ்வதி நகர் பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணி.**

  பாண்டியன் சாலையில் பக்கிங்ஹாம் கால்வாய்க்கு இணைப்பு கொடுத்து புதிய மழைநீர் வடிகால் ஒன்று 840 மீட்டர் நீளத்திற்கு ரூ.189.00 இலட்சம் செலவினத்தில் கட்டடப்பட்டது.

  இதன் மூலம் பாண்டியன் சாலை, குமரகுரு அவின்யூ மற்றும் சரஸ்வதி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **துரைப்பாக்கத்தில் உள்ள எழில் நகர் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணி.**

  கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் உள்ள மழைநீர் வடிகால்கள் இணைக்கப்பட்டு அதிலிருந்து வெளியேறும் தண்ணீர் பக்கிங்ஹாம் கால்வாயினை சென்றடையுமாறு ஒரு பெரிய மழைநீர் வடிகால் 156 மீட்டர் நீளத்திற்கு ரூ,174.00 இலட்சத்தில் கட்டடப்பட்டது.

  இதன் மூலம் கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்காத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சியில் 2015 ஆம் ஆண்டு பருவ மழை காலத்திற்கு பின் மழைநீர் தேங்காமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:-</u>**

- கத்திவாக்கம் நெடுஞ்சாலையில், எண்ணூர் விரைவு வழிபாதை எ.ஐ.ஆர் நகர் சாலையில் (சுனாமி குடியிருப்பு) மற்றும் கலைஞர் நகர்- மண்டலம் -1ல் புதிதாக 818 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய், ரூ.199.00 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் கத்திவாக்கம்,எ.ஐ.ஆர். நகர் ஆகிய திருவொற்றியூர் பகுதியில் மழைநீர் தேங்காமல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மணலி புதுநகர் மற்றும் கன்னியம்மன் பேட்டை குளம் முதல் கடப்பாக்கம் ஏரி வரை- மண்டலம்-2ல் புதிதாக 62 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.13.20 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் புதுநகர் மற்றும் கன்னியம்மன் பேட்டை குளம் ஆகிய மணலி பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மகாலட்சுமி நகர், புனித அந்தோனியர் தெரு மற்றும் ஒத்தாவடை தெரு மண்டலம்-3ல் புதிதாக 440 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு சிறுபாலம் மற்றும் திறந்த வெளி மழைநீர் வடிகால்வாய் ரூ.8.55 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் மாதவரம் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- கணேசபுரம் பிரதான சாலை மண்டலம்-4ல் மழைநீர் வடிகால்வாயில் இணைப்பு துண்டிக்கப்பட்ட பகுதிகளில் 200 மீட்டர் நீளத்திற்கு புதியதாக கற்காரைக் குழாய் ரூ.8.50 இலட்சம் செலவினத்தில் பதிக்கப்பட்டது.

  இப்பணியால் கணேசபுரம் , தண்டயார் பேட்டை பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ஈ.வி.கே. சம்பத் சாலை, எக்மோர் பிரதான சாலை, அருணாச்சலம் ரோடு, செல்லப்பிள்ளை கோயில் தெரு மற்றும் ஜி.பி ரோடு- மண்டலம்-5ல் புதிதாக 3435 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.860 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
  இப்பணியால் ஈ.வி.கே. சம்பத் சாலை மற்றும் எக்மோர் பிரதான சாலை, ஆகிய இராயபுரம் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- மதுரைசாமி மடம் சாலை-மண்டம்-6ல் மழைநீர் வடிகால்வாயில் புதிதாக 52 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் ரூ.15.90 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் மதுரைசாமி மடம் சாலை கொளத்தூர் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- அண்ணா நகர், நான்காவது மற்றும் ஐந்தாவது பிரதான சாலை- மண்டலம்-8ல் புதியதாக 190 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ. 34.08 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் அண்ணா நகர், நான்காவது மற்றும் ஐந்தாவது பிரதான சாலை பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- வடக்கு உஸ்மான் ரோடு மற்றும் ஆர்,கே.சண்முகம் சாலை - மண்டலம்-10ல் புதியதாக 40 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.6.19 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் வடக்கு உஸ்மான் சாலை மற்றும் ஆர்,கே.சண்முகம் சாலை, தி.நகர் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- பாரதி சாலை - மண்டலம்-11ல் புதிதாக 40 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.8.40 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் பாரதி சாலை , வளசரவாக்கம் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- நங்கநல்லூர்44 –வது தெரு - மண்டலம்-12ல் புதிதாக 200 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.24 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் நங்கநல்லூர் , ஆலந்தூர் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- எல்.பி.ரோடு, கஸ்தூரிபாய் நகர், இந்திர நகர், அண்ணா அவென்யூ, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், வால்மீகி தெரு, சி.எஸ்.ஐ.ஆர் நகர் மற்றும் ஜெர்னலிஸ்ட் காலனி - மண்டலம்-13ல் புதிதாக 484 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ.131.90 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் அடையாறு பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ராம் நகர் வடக்கு 11வது தெரு - மண்டலம்-14ல் புதிதாக 10 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ0.75 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் ராம் நகர் வடக்கு 11வது தெரு , பெருங்குடி பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- எல்லையம்மன் கோயில் தெரு, எம்.சி.என் நகர், மேட்டு குப்பம் (OMR) மற்றும் விப்ரோ சாலை - மண்டலம்-15ல் புதிதாக 772 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு மழைநீர் வடிகால்வாய் ரூ20.07 இலட்சம் செலவினத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

  இப்பணியால் எம்.சி.என் நகர், விப்ரோ சாலை சோழிங்கநல்லூர் பகுதியில் மழைநீர் தேங்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.